Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 5, Issue - 1, November 2025 E-ISSN: 2583-0481

# Manifestations of Human Life and Ethics in *Palaikkali*

**K. Bharathi,** Ph.D Research Scholar (BDU2310632780287), Department of Tamil, Government Arts College, Affiliated to Bharathidasan University, Tiruchirappalli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org./0009-0004-4594-7289
**Dr. B. Valarmathi,** Assistant Professor of Tamil, Government Arts College, Affiliated to Bharathidasan University, Tiruchirappalli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org./0009-0007-8713-1861
**DOI: 10.5281/zenodo.18872263**
**Received:** 10 August 2025, **Revised:** 27 September 2025, **Accepted:** 27 October 2025, **Available online:** 26 November 2025.

## Abstract

*Sangam literature is a repository of culture and civilization. It shows the life thoughts that one should live in life. It is not just living anyway in leading life. Therefore, it is necessary to find meaning for life. The lifestyle of the Sangam people was in such a way they could live comfortably with what they have with them. In the Sangam period, job and earning money was the main occupation of men. Until the leader (Thalaivan) earns money, the beloved (Thalaivi) looks after the house. The money that the leader brings is useful for them and for their dependents. They lived by sharing everything what they have with others. "I never lie to live: I tell the truth to live" was the life principle of the Sangam ancestors of that time. There are many evidences in the Sangam Literature on Sangam life. Nevertheless, the article highlights the life principles of the Sangam people.*

**Keywords:** Sangam People, Palaikali, Lifestyle, Method.

## References

[1] Subramaniyan, Sa. Ve. *Pattuppattu Mulumum TeliVuraiyum*. Manivacakar Patippakam, Chennai - 600 104.
[2] Ayyanar, Pinna Thur Thiru. A. *Narrinai*. Thennindia Saivasittanta Noorpatippukkalakam, Chennai-18.
[3] Naccinarkkiniyar. *Kalittokai Mulumum Uraiyum*. Thennindia Saivasittanta Noorpatippukkalakam, Chennai-18.
[4] Balasubramanian, Dr. C. *Canka Kala Makalir*. Pari Nilayam, Chennai-600 108.
[5] Parimelalagar. *Tirukkural Mulumum Uraiyum*. Saradha Patippakam, Chennai-14.
[6] Manivazhagan. *Nanmanikkatikai Mulumum Uraiyum*. Uma Patippakam, Chennai.
[7] Ilampuranar. *Tolkappiyam, Porulatikaram*. Sarata Patippakam, Chennai-14.
[8] *Muthurai*. By Avvaiyar, Caivacittanta Patippukkalakam, Chennai.
[9] Somasundaranar, Po. Ve. *Kuruntokai*. Thennindia Saivasittanta Noorpatippukkalakam, Chennai-18.
[10] Shanmugam Pillai, M. *Cankat Tamilar Vazhviyal*. Ulaga Tamilaraycci Niruvanam, Chennai.
[11] Bharathiyar. *Bharathiyar Kavithaikal*. Varthamanan Patippakam, Chennai-17.
[12] Rajamanickanar, Dr. M. A. *Kalittokai*. Pumppukar Patippakam, Chennai-600 108.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பாலைக்கலி உணர்த்தும் வாழ்வியல் முறைகள்

**கா. பாரதி,** முனைவர்ப்பட்ட ஆய்வாளர் (BDU2310632780287), தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி,
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org./0009-0004-4594-7289
**முனைவர் ப. வளர்மதி,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி,
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org./0009-0007-8713-1861
DOI: 10.5281/zenodo.18872263

## ஆய்வு நோக்கம்

*சங்க இலக்கியங்கள் பண்பாட்டையும், நாகரிகத்தையும் அள்ளித்தரும் அரிய களஞ்சியங்கள் ஆகும். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக் காட்டுகின்றன. வாழ்க்கைக்குப் பொருள் தேடுவது அவசியம் தான். இருப்பதை வைத்துக்கொண்டு சுகமாக வாழக்கூடிய நிலையில் தான் சங்க கால மக்களின் வாழ்க்கை முறை இருந்தது. சங்ககாலத்தில் பொருள் ஈட்டுவது ஆடவர்களின் தலையாய கடமை ஆகும். தலைவன் பொருள் ஈட்டி வரும் வரையில் தலைவி இல்லத்தைக் கவனிக்கின்றாள். தலைவன் கொண்டுவரும் பொருள் அவர்களுக்கு மட்டும் பயன்படுவதோடு அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் பயன்படுகின்றது. பகிர்ந்து கொடுத்து வாழ்ந்துள்ளனர்.* ***"வாழ்தல் வேண்டி பொய் கூறேன்: மெய் கூறுவல்"*** *என்பது அன்று முன்னோர்கள் கண்ட வாழ்வியல் நெறியாகும். சங்க மக்களின் வாழ்வியல் நெறிகளை அறிந்து கொள்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** சங்க மக்கள், பாலைக்கலி, வாழ்வியல், முறைகள்.

## முன்னுரை

செந்தமிழுக்குச் சிகரமாக விளங்கும் சங்க இலக்கியத்துள் **'கற்றறிந்தார் ஏத்தும் கலி'** எனப் போற்றப்படும் இனிய நூல் **கலித்தொகை**. ஒவ்வொரு பாடலும் ஒரு சிறுகதை போல அமைந்து கற்பார்க்கு இன்பம் பயக்கும். பாலைக்கலியில் உள்ள பாடல்கள் பிரிவைப் பற்றிக் கூறுவதால் தலைவன், தலைவி இருவரின் அளவு கடந்த அன்பை வெளிப்படுத்துகின்றன. தலைவன் தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் செல்லும் நிலையும், தலைவி பிரிந்திருப்பதும், **பாலைக்கலி**யில் கூறப்பட்டுள்ளன. தலைவன் பொருள் தேடச் சென்றாலும் தலைவியானவள் இல்லத்தைக் காக்கின்றாள்.

தலைவனின் நிலையை எண்ணி வருந்துகின்றாள் .பொருள் தேடச் செல்லும் தலைவனிடம் தானும் உடன் வருவதாகக் கூறுகின்றாள் .இருவரும் ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து இல்லறம் நடத்தியமையைப் பாலைப் பாடிய பெருங்கடுங்கோ பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது .கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையில் மகளிர் தம் கற்புநெறி பலவாறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது" .பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் " என்று கலித்தொகை கூறுகிறது.

பண்பாடு என்பது சமூகத்தில் பல வடிவங்களில் மாற்றம் அடைகின்றது. சமூகத்தில் உயர்ந்த பண்புகளை நிலை நிறுத்தி, அதன் மூலம் மக்களை நல்வழிப்படுத்தவும் செய்கின்றது. பாலைக்கலி பாடலின் மூலம் தலைவன், தலைவியின் குடும்ப வாழ்க்கை முறை, விட்டுக்கொடுத்து வாழ்தல், ஆண்களின் கடமைகள்,பொறுப்புகள், பொருள் தேடலின் அவசியம், தலைவியின் ஆற்றியிருத்தல் பண்பு, துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு வாழ்ந்த பண்பு, உடன் இருந்தவர்களின் அறிவுரைகளைக் கேட்டுநடத்தல் போன்ற சிறந்த வாழ்வியல் முறைகளை எடுத்துக் காட்டுவதாக உள்ளன.

**மனையறம்**

குடும்பம் என்னும் அமைப்பானது ஓர் ஆணும், பெண்ணும் அவர்களுடைய சமுதாய முறைப்படி மண வாழ்வில் ஈடுபடுவதால் உருவாகிறது. கணவன், மனைவி என்னும் சொல், சமூகத்தினரால் உச்சரிக்கப்படும் பொழுதுதான் அச்சொல்லிற்கு மதிப்புக் கிடைக்கின்றது. மதிப்புடன் அமையும் உறவுகளைக் கொண்டது குடும்பம் ஆகின்றது. இல்வாழ்க்கையாகிய தேருக்கு அச்சாணியாக விளங்குபவள் தலைவி ஆவாள். **'இல்லாள்'** என்ற சொல் **'இல்லத்தை ஆள்பவள்'** என்ற பொருளைத் தரும். மனையறம் நிகழ்த்தும் உரிமை மகளிர்க்கே வழங்கப்பட்டது. பாரதியாரின்,

**காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்**
**காரியம் யாவினுங் கைகொடுத்து**
**மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்**
**மாட்சி பெறச் செய்து வாழ்வமடி**

என்ற கவிதை வரிகளில் மகளிர் ஆண்களுடன் ஒத்திருந்து வாழ்ந்த வாழ்வை எடுத்துக் காட்டுகின்றன. சங்க காலத்தில் வளமையிலும், வறுமையிலும் ஒற்றுமையுடன் இணைந்த வாழ்வினை வாழ்ந்தனர். இதனை,

**பழம்பசி கூர்ந்தவெம் இரும்பே ரொக்கலொடு**
**வழங்கத் தவாஅப் பெருவள னெய்த (பெரும்பாண். 25-26)**

என்ற அடிகளின் வழியாக வறுமை வந்தும் பிரிந்து போகாத சுற்றத்தினைக் காணமுடிகிறது. இதிலிருந்து சங்க கால மக்கள் வற்றியதும் பறந்து போகும் நீர்ப் பறவைபோல வாழாது, அக்குளத்திலே வாடி, மடிந்திடும் தாவரங்களைப் போல வாழ்ந்துள்ளனர் என்பதை,

**அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவல்லர் அக்குளத்தில்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**
**ஒட்டியுறுவார் உறவு. (மூதுரை பா. 17)**

எனும் மூதுரைப்பாடல் வெளிப்படுத்துகிறது. கணவனும், மனைவியும் ஒற்றுமையுடன் வாழ்ந்ததை,

**ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதுஅரோ**
**சென்ற இளமை தரற்கு. (கலி. பாலைக்கலி பா. 18; 10; 12)**

என்னும் இப்பாடல் வாயிலாக இன்ப துன்பங்களைப் பகிர்ந்து இல்லறம் நடத்தியதைக் காணமுடிகின்றது. வாழ்நாள் முழுவதும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டும் ஒரே ஆடையை இரண்டாக்கி உடுத்தும் அளவிற்கு வறுமையில் வாழ்ந்தாலும், அதற்காக வருந்தாது, இருவரும் வாழ்ந்துள்ளனர். மேலும் கழிந்த இளமையை மீண்டும் பெறுவது அரியதாகும் என்ற சிந்தனையை இப்பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது.

இன்றைய ஆடம்பரமான வாழ்க்கைச் சூழலில் பொருள் தேடுவதற்காகக் குடும்பத்தை விட்டும் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். சிலர் இறுதிக்காலம் வரை திரும்பி வருவதில்லை. சிலர் பெயரளவில் வருடத்திற்கு ஒரு முறை மட்டும் வருகின்றனர். சிலர் தாய், தந்தை இறப்பிற்கு மட்டும் வருகின்றனர். சிலர் இறுதிச்சடங்கிற்குக் கூட வரமுடியாத நிலையில் உள்ளனர். வாழ்க்கைக்குப் பொருள் தேடுவது அவசியம் தான். அப்பொருள் தேடுவதில் அவர்களின் காலம் முழுவதும் சென்றுவிடுகின்றது. வாழ்க்கை வாழ்வதற்குப் பொருள் இன்றியமையாத் தேவையாகும். பொருள் தேடுவதில் காலம் முழுவதும் சென்றுவிட்டால் வாழ்க்கையில் பாதி நாட்கள் கழிந்துவிடும். பணம் மட்டும் வாழ்க்கை கிடையாது. இருப்பதை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதற்கு இப்பாடல் சான்று ஆகும். **திருக்குறளும்** இக்கருத்தை,

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (குறள் 51)**

என்றவாறு விளக்குகிறது. இல்வாழ்க்கைக்கு ஏற்ப நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகிறவள் சிறந்த வாழ்க்கைத்துணை ஆவாள் என்று விளக்கம் கூறுகின்றது. இருப்பதை வைத்துக்கொண்டு வளமான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற சிந்தனையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

**பொருள் தேடல்**

பொருள் தேடலின் அவசியத்தை,

**அருளில்லார்க்குக் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்**
**கிவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள் 247)**

என்ற குறளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. பொருள் இல்லார்க்கு இவ்வுலகத்து இன்பம் இல்லை. வாழ்க்கை வாழ்வதற்குப் பொருள் தேடுவது ஒவ்வொருவரின் கடமை ஆகும். பொருள் தேடலில் ஆண்களின் பங்கு முதன்மையானது ஆகும். ஆனால் இன்றளவில் இருவரும் சம அளவில் குடும்பப் பொறுப்புகளைக் கவனிக்கின்றன்ர். இன்றைய நிலையில் இருவரும் பொருள் தேடினாலும் அவர்களின் குடும்பத்திற்கு மட்டும் பயன்படுகின்றது. அது மட்டுமில்லாமல் அவர்களுக்கு அதுவும் பற்றாக்குறையான சூழ்நிலை தான் உள்ளது. ஆனால் சங்க காலத்தில் இல்லை என்று இரப்போர்க்கு வழங்கி வாழ்ந்ததை ,

**இல் என, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என**
**கல் இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ (பா 2: 15-16)**

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. தன்னிடம் பொருளில்லை என்று கூறிவந்து இரந்தவர்க்குப் பொருள் கொடுக்கும் வழக்கம் இருந்ததை இப்பாடல் வழியாகக் காண முடிகின்றது. ஈகைக் குணத்தைப் பெரிதாக மதித்துள்ளனர் என்பது புலப்படுகிறது. தன்னிடம் பொருள் வேண்டுவோர்க்கு இல்லை என்று கூறுவது இழிவென்றும் கருதி வாழ்ந்தனர். இன்றைய நிலையில் பொருள் வைத்துக் கொண்டு இல்லை என்று கூறுகின்றனர். அப்படிக் கொடுத்தாலும் ஏதாவது உறுதிப்பொருள் பெற்றுக் கொண்டுதான் கொடுக்கின்றனர். காலம் வந்தவுடன் திருப்பிக் கேட்கின்றனர். சங்க காலத்தில் எவ்வித பலனையும் எதிர்பார்க்காமல் உதவினர் என்பதை மற்றுமொரு பாடலில்,

**அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்**
**பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்**
**புரிவமர் காதலிற் புணர்ச்சியுற் தருமெனப்**
**பிரிவென்ணிப் பொருள் வயிற் சென்றநங் காதலர் (பா 11: 1-4)**

என்றவாறு காணமுடிகின்றது.

பொருள் தேடிக்கொணர்ந்ததைத் தான் மட்டும் வைத்துக்கொள்ளாது பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்துள்ளனர். பொருள் வேண்டுபவர்களுக்கு இல்லையெனக் கொடுப்பதற்கும், மனம் ஒத்த காதலர்களாய் வாழ்வதற்கும், பொருள் தேவை ஆகும். வாழ்க்கை வாழ்வதற்குப் பொருள் இன்றியமையாத ஒன்று. பொருள் தேடுவதில் முழுவதுமாகச் செயல்பட்டால் வாழ்க்கையை வாழ முடியாது. தேவைக்கு மட்டும்தான் பொருள் என்பதும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் பொருளை அளிப்பதும் சிறந்த வாழ்வியல் அறங்கள் ஆகும். பகிர்ந்து கொடுத்து வாழும் நற்சிந்தனையை வெளிப்படுத்துவதன் மூலம் பிற்கால மக்களுக்குச் சமூகச் சிந்தனையை வலியுறுத்துகின்றனர்.

**ஆண்மகனுக்கு அழகு**

ஆண்மகன் தனக்கென வாழாது தன்னைச் சார்ந்த சுற்றத்தினருக்காகவும் வாழ வேண்டும் என்பதை,

**துடியடிக்கயந்தலை கலக்கிய சின்னீரைப்**

**பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே (பா,11: 8-9)**

என்னும் பாடல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. ஆண்யானை, பெண்யானை, குட்டி மூன்றும் குறைந்த அளவு உள்ள நீரைக் குடிக்கச் சென்றன. குட்டி நீரைக் கலக்கிவிட்டது. கலங்கிய நீரைப் பெண்யானை குடிக்கட்டும் என்று காத்திருந்து , எஞ்சிய நீரை ஆண்யானை குடித்தது. இன்று தன்னுடைய இன்பத்திற்காகக் குடும்ப உறவுகளைப் பற்றிக் கவலை இல்லாமல் ஆண்கள் பலர் இருக்கின்றனர். குடும்பம், மனைவி, பிள்ளைக:ள், பெற்றோர்கள் பற்றியும் நினைக்காமல் சுய இன்பத்திற்காகத் தவறான வழிகளில் ஈடுபடுகின்றனர். இப்பாடல், குடும்பத்தின் மீது தலைவன் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் பாடலாக அமைந்துள்ளது.

மற்றொரு பாலைக் கலிபாடலில் தலைவன் துணையைப் பேணிக்காப்பதைக் கடமையாகக் கருதும் நிலையைக் காணமுடிகின்றது. நிழலின்றித் தவிக்கும் பெண்மானுக்குத் தன் நிழல் அதன் மீது படுமாறு நின்று, தன் துணையை வெம்மையிலிருந்து காத்து நிற்கின்ற ஆண்மானின் செயலையும் அறியமுடிகின்றது. இது தன் இணையின் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துவதாக உள்ளது. இதனை,

**அன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை**
**மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே (பா.11: 12-13)**

எனும் வரிகள் காட்டுகின்றன.

இன்றைய சமுதாயத்தில் கணவன், மனைவி உறவில் பிரிவு என்பது இயல்பான ஒன்றாக இருக்கிறது. அதற்குக் காரணம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமையே ஆகும். அங்ஙனம் கணவன், மனைவி பிரியாமல் ஒற்றுமையுடன் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழ்வதற்குரிய வழிகாட்டுதல்களை,

**நின்ற சொல்லர் நீடுதோன்றினியர்**
**என்றும் என்றோன் பிரிபறியலரே**
**சிறுமை உறுபவோ செய்பறியலரே (நற் பா. 1)**

எனும் பாடலில் காண முடிகின்றது. இதில் தலைவன் தவறாத வாய்மையுடையவன், இனிமையுடையவன், எப்பொழுதும் தலைவியின் தோள்களைப் பிரியும் குறைபாடு இல்லாதவன் என்று தலைவனின் சிறப்புகளை உணர முடிகிறது. இன்று பல குடும்பங்கள் சிதைவதற்குக் காரணம் ஆண்களின் தன்னலப்போக்கு ஆகும். மேற்காணும் பாடல் அடிகளின் மூலம் தலைவன் குடும்பத்தின் மீது கொண்டுள்ள அன்பும், அக்கறையும் வெளிப்படுகின்றன. குடும்பம் என்றால் இருவரும் ஒருவருக்கொருவர் அன்புடனும், விட்டுக்கொடுத்தும், வாழ வேண்டும் என்ற நற்சிந்தனையை விளக்குவதாக இப்பாடல் அடிகள் உள்ளதைக் காண முடிகின்றது.

**தலைவனின் மனநிலை**

தலைவியைத் தலைவன் பிரிந்து செல்ல எண்ணுகிறான். அவனுக்கு அவளைப் பிரிந்து செல்ல மனம் வரவில்லை இருந்தாலும் பொருள்தேடச் சென்றுதான் ஆக வேண்டும் என்பதால் தலைவியிடம் அதிகமாக அன்புடன் நடந்து கொள்கிறான். இதனை,

**தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்**
**கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ (பா 24:8-9)**

என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றது. தலைவன் பொருள் தேடிச் சென்று கொணரும் வரை இல்லத்தில் இருக்கும் தலைவியின் நிலையை எண்ணிப் பார்க்கிறான். தான் இல்லாத காலத்தில் வளையல்களை முன்கையில் அணிந்துள்ள தலைவி துன்புறாமல் இல்லறம் காக்கும் வல்லமை உடையவள் ஆவாள். தலைவியின் நிலையைப் பிரிவு காலத்திலும் எண்ணி வருந்துபவனாகத் தலைவன் உள்ளான். குடும்பத்தைப் பற்றி நினைக்கும் தலைவன் நிலை இங்கு சுட்டப்படுகிறது. வேலைக்குச் சென்றால் குடும்பத்தை மறந்து வாழ்கின்ற நிலைதான்

இன்று உள்ளது. குடும்பத்திற்குப் பொருள் தேடுவது அவசியம் ஆகும். வேலைக்காகச் சென்றாலும் குடும்பத்தின் நினைவு இருக்க வேண்டும் என்பதற்கு இப்பாடல் சான்றாகும்.

**தலைவியின் மனநிலை**

தலைவன் பொருள் தேடச் செல்கின்றான். தலைவனை நினைத்துத் தலைவி வருந்துகிறாள். தலைவன் வரும் வரை இல்லறத்தைக் காக்கும் பொறுப்பு அவளுக்கு உண்டு. அவன் வரும் வரையில் ஆற்றியிருத்தல் தலைவியின் கடமை ஆகும். **“வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள் (பா 2:22)”** என்னும் பாடலடி சுட்டுகிறது. தலைவி அருந்ததி போன்று அனைவரும் தொழுது போற்றும் கற்புடையவள். தலைவியின் மென்மையான தோள்களைப் பிரிந்து பொருள் தேடச் செல்ல வேண்டாம் என்றாள். அப்படிக் கொணர்ந்த செல்வம் பொருளாகாது என்று தலைவி எண்ணுகிறாள். இதன் மூலம் தலைவன் கொண்டு வரும் பொருளை விடவும் அவன் தன்னை விட்டுப்பிரியாமல் இருக்க வேண்டும் என்று தலைவி நினைப்பதை அறிய முடிகின்றது. **“மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்” (குறுந் -135)** என்ற பாடல் வரிகள், மகளிர்க்கு ஆடவர் உயிர் போன்றவர் ஆவார். அவர் கொண்டு வரும் பொருளைவிடவும் அவர் அருகில் இருப்பதைத் தான் பெண்கள் விரும்பினர் என்பதைக் காட்டுகிறது. இக்கருத்தை, **“இன்னுயிரன்ன பிரிவருங்காதலர்…” (நற் – 237)** என்ற நற்றிணைப் பாடலும் மகளிர்க்கு ஆடவர் உயிர் போன்றவர் என்பதை உணர்த்துகின்றது. இவ்வாறு பொருளை வைத்து மட்டும் , இன்பமுடன் வாழாமல் தலைவனின் துன்பத்திலும் துணையாக இருப்பது அவளின் கடமை என்பதனைத்,

**துன்பம் துணையாக நாடின் அதுவல்லது**
**இன்பமும் உண்டோ எமக்கு (பா. 6: 10-11)**

என்னும் பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. இன்பத்தில் மட்டுமல்லாமல் துன்பத்திலும் துணையாக இருப்பது மனைவியின் கடமை ஆகும். வாழ்வில் இருவரும் இணைந்து வாழ்வினை எதிர்கொண்டு வாழ வேண்டும் என்ற நற் சிந்தனையை இப்பாடல் எடுத்துக் காட்டுகிறது. தலைவியானவள் தலைவன் மீது கொண்ட அன்பினை,

**சாதல் அஞ்சென் அஞ்சுவல் சாவில்**
**பிறப்புப் பிறிதா குவது ஆயின்**
**மறக்குவென் கொலென் காதலன் எனவே (நற் 387: 7-9)**

என்னும் பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றன.

இது தலைவியின் பெருமை வாய்ந்த நிலையைக் கூறுகின்றது. தான் சாவதற்கு அஞ்சவில்லை என்றும், ஆனால் இறந்துவிட்டால் தலைவனோடு கூடி வாழும் இப்பிறப்பு மாறிவிடும் என்றுதான் வருந்துவதாகக் கூறுகின்றாள். இதன் மூலம் தலைவி, தலைவன் மீது கொண்டுள்ள அன்பினைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

**வாழ்க்கை எதார்த்தம்**

வாழ்க்கையின் எதார்த்தத்தை,

**பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை**
**மலையுளே பிறப்பினு மலைக் கவைதா மென்செய்யும்**
**நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே**
**சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை**
**நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்**
**தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே (பா.9:13-18)**

என்ற பாடலின் மூலம் பாலை பாடிய **பெருங்கடுங்கோ** விளக்குகிறார். பெண்கள் பிறந்த வீட்டில் இருந்து, புகுந்த வீட்டிற்குச் சென்று வாழ வேண்டும் என்ற நிலைதான் சமூகத்தில் உள்ளது. பெண்களுக்குப் புகுந்த வீடுதான் நிலையானது ஆகும். மலையில் பிறந்த சந்தனமும், கடலில் பிறந்த முத்துக்களும், யாழ் இசையும் பிறந்த இடங்களுக்குப் பயன்படா. அவற்றைப்

பயன்படுத்துபவர்களுக்குத் தான் பயன்படும். அதுபோல பெண்கள் பிறந்த வீட்டைத் தாண்டியும், புகுந்த வீட்டைத் தன்னுடைய வீடாகக் கருதி வாழும் நிலைதான் உள்ளது. எனவேதான் பெண்களை, "**மனைக்கு விளக்கம் மடவாள்**" (நான்மணி. 105: 1) என்று சிறப்பித்தனர். பெண்கள் இல்லாத வீடு பாழாவதை, "**மனைக்குப் பாழ் வாள்நுதல் இன்மை**" (நான்மணி. 22: 1) என்னும் வரியால் அறிய முடிகின்றது.

**பெண்களின் நிலை**

கணவனால் கைவிடப்பட்ட பெண்களைப் பின்வரும் பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

**தோணலமுண்டு துறக்கப்பட்டோர்**
**வேணீ ருண்ட குடையோ ரன்னர் (பா. 23: 8-9)**

தன் தோள்களைத் தழுவி, மகிழ்ந்திருந்த கணவனால் கைவிடப்பட்ட பெண், நீருண்டபின் வீசி எறியப்பட்ட பனை ஓலைக்குடைக்கு ஒப்பாவாள் என்கிறார் பாலை பாடிய **பெருங்கடுங்கோ.** பெண்கள் கணவனுடன் சேர்ந்து இருந்தால் மதிக்கப்படுவார்கள். இன்றைய நிலையில் தனித்தும் பெண்கள் வாழ்கின்றனர். ஆண்கள் அளவிற்கு வருமானம் ஈட்டக்கூடிய நிலைக்கு வளர்ந்துள்ளனர். ஆண்களின் துணை இல்லாமல் பெண்களும் வாழ முடியும். சமூகத்தில் தனித்து வாழும் பெண்களுக்குப் போதிய அங்கீகாரம் அளிக்கப்படுவதில்லை. கணவனின்றித் தனித்து வாழும் பெண்களின் நிலை ஓரளவிற்கு மாற்றம் பெற்றுள்ளது. கணவன் இருந்தும் தனித்து வாழும் பெண்களும் இருக்கின்றனர். பெண்களின் நிலையானது எச்சூழ்நிலையிலும் வாழ்க்கை நடததுவதற்கான மனப்பக்குவத்துடன் இன்றைய பெண்கள் இருக்கின்றனர்.

சங்க காலத்திலும் ஒரு பசுவினால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு உண்ணும் உணவுடைய செல்வச் சிறப்பில்லாத இல்வாழ்க்கை காணப்பட்டது. அழகும், இளமையும் நிறைந்த தலைவி அக்குடும்பத்தில் மணமகளாகப் புகுந்தன் பிற்பாடு இனிமை நிறைந்த விழாவெனும்படி செல்வச் சிறப்புடையதாயிற்று என்று ஊர்மக்கள் பேசுவதாகத் **தூங்கலோரியார்** என்னும் புலவர் பதிவு செய்துள்ளார். இதனை

**ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை**
**பெருநலக் குறுமகள் வந்தென**
**இனிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே (குறுந் 295: 4-6)**

என்னும் பாடல் விளக்குகிறது.

இப்பாடல் வரிகளில் பெண்களின் சிறப்பைக் காணமுடிகிறது. வறுமையான சூழ்நிலை இருந்தாலும் தலைவியானவள் குடும்பத்தைச் சிதையாமல் காக்கின்றாள். வறுமை நிலையிலும் செம்மையுடன் வாழ்ந்தனர் என்பதைக் காணமுடிகின்றது.

முல்லை நில மகளிர் தாம் விரும்பிய ஆடவரை மணந்து கொள்கின்றனர். மகளிர் மனத்திட்பத்தை ஆய மகளிர் தாம் காதலித்தவர் ஒருவரும், கைப்பிடிப்பவர் பிறிதொருவராகவும் அமையும் இருமணத்தினை, உலகமே பரிசாகக் கிடைப்பதாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டாத இல்லற நெறியனர் என்பதைப் பின்வரும் முல்லைக்கலி பாடல் வாயிலாக விளக்குகிறது.

**வரிமணல் முன்துறைச் சிற்றில் புனைந்த**
**திருநுதல் ஆயத்தார் தம்முட் புணர்ந்த**
**ஒருமணந் தான் அறியும், ஆயின் எனைத்தும்**
**தெருமரல் கைவிட்டிருக்கே அலர்ந்த**
**விரினீர்க் உடுக்கை உலகம் பெறினும்**
**அறநெறி ஆயர் மகளிர்க்கு**
**இருமணம் கூடுதல் இல்லியல் பன்றே (மு. க. பா.14: 15-21)**

பெண்களுக்குக் கற்பும், காமமும், நல்லொழுக்கமும், பெண்மைத்தன்மை பொருந்திய பொறுமைப்பண்பும், விருந்து போற்றும் மன நலமும், சுற்றத்தினரைத் தழுவும் வழக்காறும் தலைமகளுக்குரிய தலையாய பண்புகள் எனத் **தொல்காப்பியர்** குறிப்பிடுகிறார். இதனை,

**கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள் (தொல் கற், 11)**

என்னும் வரிகள் விளக்குகின்றன.

**முடிவுரை**

பாலைக்கலி பாடல்கள் பண்பட்ட வாழ்க்கை முறைகளை எடுத்துக்கூறுகின்றன. இப்பாடல்களில் தலைவனின் உள்ளப்பண்பும், தலைவியின் மனதிட்பமும் கூறப்படுகின்றன. தலைவன், தலைவி இருவரின் காதல் வாழ்வும், நம்பிக்கைகளும், இல்வாழ்க்கை முறைகளும் கூறப்பட்டுள்ளன. வாழ்க்கைக்குப் பொருள் தேடுதலின் அவசியம் பற்றியும், தலைவியின் ஆற்றியிருத்தல் பண்பும், வாழ்க்கை எதார்த்தத்தையும் எடுத்துக்கூறுகின்றன. பொருள் தேடுதல் ஒன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு இருக்கும் இன்றைய நிலையில், பொருளை விடவும் குடும்பம் முதன்மையானது என்பதைப் பாலை பாடிய **பெருங்கடுங்கோ** பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. குடும்பத்தில் உள்ளவர்களின் மீதும் அன்புடன் இருக்க வேண்டும் என்ற சிந்தனையை வெளிப்படுத்துகின்றன. தலைவன் மட்டுமின்றி தலைவியும் அன்புடன் இணைந்த வாழ்வினை வாழ்ந்துள்ளாள். அவள் தலைவன் கொணர்ந்த பொருளினைப் பிறருக்கும் அளித்தும் வாழ்ந்துள்ளாள் என்பதைப் பாலைக்கலி பாடல்கள் விளக்குகின்றன. பொருள் தேடுதல் தலைவனின் கடமை என்றாலும், பொருளை வைத்துக்கொண்டு இல்லறத்தை வழிநடத்துபவள் தலைவி. இருவரும் இணைந்து வாழ்ந்தால்தான் இல்லறம் சிறக்கும் என்பதையும் மேற்காணும் பாடல்கள் உணர்த்துகின்றன. தற்கால இல்லற வாழ்க்கையின் எதார்த்தத்தைப் புரிந்து வாழ்ந்தால் பிளவுகளின்றி சிறப்பாக வாழ்க்கை அமையும் என்பது ஆய்வாளரின் நம்பிக்கையாக உள்ளது.

**குறிப்புகள்**

[1] ச.வே.சுப்பிரமணியன். *பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரை*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600 104.
[2] பின்னத்தூர் திரு. அ. நாராயணசாமி ஐயர், *நற்றிணை*. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-18.
[3] நச்சினார்க்கினியர். *கலித்தொகை மூலமும் உரையும்*. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-18.
[4] முனைவர் சி. பாலசுப்பிரமணியன். *சங்க கால மகளிர்*. பாரி நிலையம், சென்னை-600 108.
[5] பரிமேலழகர். *திருக்குறள் மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், சென்னை-14.
[6] மாணிக்கவாசகன். *நான்மணிக்கடிகை மூலமும் உரையும்*. உமா பதிப்பகம், சென்னை.
[7] இளம்பூரணனார். *தொல்காப்பியம், பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், சென்னை-14.
[8] ஔவையார் *மூதுரை*. சைவசித்தாந்த பதிப்புக்கழகம், சென்னை.
[9] பொ.வே.சோமசுந்தரனார். *குறுந்தொகை*. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18.
[10] மு.சண்முகம்பிள்ளை. *சங்கத்தமிழர் வாழ்வியல்*. உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
[11] *பாரதியார் கவிதைகள்*. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
[12] முனைவர் மா. இராசமாணிக்கனார். *கலித்தொகை*. பூம்புகார் பதிப்பகம், சென்னை-600 108.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.